மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.12/2020
இ.ம.எண்.04/2019
அ.வ.எண்.03/2019

1. அங்கப்பன்
2. அருள்மொழி
3. தேன்மொழி
4. கார்த்திகேயன்
5. இளையராஜா
6. ஜோதி
7. ஆறுமுகம் ...மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள்

/எதிராக/

1. குமார்
2. பிரித்தா ...எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

3. தங்கராஜி ...எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி

இம்மனு கடந்த 30.04.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.சிவராம் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 3 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.அழகேசன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை இல்லை மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

மேற்படி வழக்கில் மனுதாரர்கள் இ.ம.எண்.02/19 மற்றும் 03/19 ல் எதிர்மனுதாரர்களாகவும், இ.ம.எண்.04/19 ல் மனுதாரர்களாகவும் உள்ள நிலையில்

மேற்படி 3 மனுக்களும் ஒன்றாக இணைத்து விசாரணை செய்ய நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனுக்களில் கடந்த 21.02.2020 ல் மனுதாரரர்கள் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தேதியில் மனுதாரர்களது வழக்கறிஞரின் இளம் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். அப்பொழுது அவரது மகனுக்கு உடல்நிலை சரியில்லை என தகவல் வந்ததால் அவர் உடனடியாக சென்றுவிட்டார். அதனால் மனுதாரர்களது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்து வாதுரை செய்ய முடியாமல் போய்விட்டது. எனவே இ.ம.எண்.04/2019 ல் ஆவணங்களை குறியீடு செய்யவும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைக்காகவும் மீண்டும் திறக்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரர்களின் வழக்கறிஞரின் இளம் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்ததாகவும், அப்போது அவரது மகனுக்கு உடல்நிலை சரியில்லை என தகவல் வந்ததால் அவர் உடனடியாக சென்றுவிட்டதாகவும், அதனால் மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்து வாதுரை செய்ய முடியாமல் போனதாகவும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யாகும். மனுதாரர்கள் வேண்டுமென்றே காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடனும் மேற்படி இடைநிலை மனுக்களில் உத்தரவு பிறப்பித்துவிடக்கூடாது என்பதாலும் திட்டமிட்டே ஒன்றன்பின் ஒன்றாக பல மனுக்களை தாக்கல் செய்தும் காலதாமதப்படுத்தி வருகின்றனர். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மேற்படி வழக்கில் மனுதாரர்கள் இ.ம.எண்.02/19 மற்றும் 03/19 ல் எதிர்மனுதாரர்களாகவும், இ.ம.எண்.04/19 ல் மனுதாரர்களாகவும் உள்ள நிலையில் மேற்படி 3 மனுக்களும் ஒன்றாக இணைத்து விசாரணை செய்ய நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி மனுக்களில் கடந்த 21.02.2020 ல் மனுதாராரர்கள் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது எனவும், அன்றைய தேதியில் மனுதாரர்களது வழக்கறிஞரின் இளம் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார் எனவும், அப்பொழுது அவரது மகனுக்கு உடல்நிலை சரியில்லை என தகவல் வந்ததால் அவர் உடனடியாக சென்றுவிட்டார் எனவும், அதனால் மனுதாரர்களது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்து வாதுரை செய்ய முடியாமல் போய்விட்டது எனவும், எனவே இ.ம.எண்.04/2019 ல் ஆவணங்களை குறியீடு செய்யவும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைக்காகவும் மீண்டும் திறக்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் வழக்கறிஞரின் இளம் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்ததாகவும், அப்போது அவரது மகனுக்கு உடல்நிலை சரியில்லை என தகவல் வந்ததால் அவர் உடனடியாக சென்றுவிட்டதாகவும், அதனால் மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்து வாதுரை செய்ய முடியாமல் போனதாகவும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய் எனவும், மனுதாரர்கள் வேண்டுமென்றே காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடனும் மேற்படி இடைநிலை மனுக்களில் உத்தரவு பிறப்பித்துவிடக்கூடாது என்பதாலும் திட்டமிட்டே ஒன்றன்பின் ஒன்றாக பல மனுக்களை தாக்கல் செய்தும் காலதாமதப்படுத்தி வருகின்றனர் எனவும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) இ.ம.எண்.04/2019 இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும். ஆகவே மேற்படி மனுவில் மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதி வழங்கி அம்மனுவினை தகுதியின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.